Volume 2 Issue 1 August 2020 E-ISSN: 2582-2063

# ஆண்டிபட்டி அகமுடையார் சமுதாய மக்களும் முனியாண்டிசாமி திருவிழாவும் - ஒரு கள ஆய்வு

**பெ. நாகலட்சுமி**

*முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை*

*வி.இ.நா.செந்திகுமார நாடார் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்*

தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் உள்ள முனியாண்டிசாமி கோவில் சுமார் 150 வருட பழமையானதாகும். ஆண்டிபட்டியில் இருந்த ராணிமங்கம்மால் ஓடையில் முனியாண்டி எனும் காவல் தெய்வத்தின் கோவில் உள்ளது. ராணிமங்கம்மால் மதுரையை ஆண்ட பொழுது வழியாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பின்னர் காலப்போக்கில் ஓடை மறைந்துவிட்டது. அங்கிருந்த கோவில் மட்டும் நிலைபெற்றுவிட்டது.

ஆண்டிபட்டியில் உள்ள அகமுடையார் சமுதாய மக்கள் முனியாண்டி சாமியை விருப்ப தெய்வமாக வணங்குகின்றனர். கோவில் பூசாரி அகமுடையார் சமுதாயம் சார்ந்தவராக உள்ளார். ஆரம்பத்தில் மிக உக்கிரமாக இருந்துவந்துள்ளார் பின்னர் உக்கிரம் தணிந்து மக்களை காக்கும் தெய்வமாக வணங்கப்பட்டு வருகின்றார்.

### கோவில் அமைப்பு

ஆண்டிப்பட்டி மேலதேருவில் அமைந்துள்ளது இக்கோவில் ஆலமரத்தின் கீழ் கூரை வேயப்பட்ட கொட்டகையில் சாமி உள்ளது. சாமிக்கு உருவம் கிடையாது. சுமார் மூன்றடி உயர சுற்று சுவர் கட்டப்பட்டுள்ளது. கோவிலுக்குள் ஒரு அருவாள் வைத்துள்ளனர் அதை கருப்பசாமி என அழைக்கின்றனர்.

கோவிலுக்கு வேயப்பட்ட கொட்டகையில் சாமி இடத்திற்கு நேர் மேலே சதுரமாக வானம் பார்க்க வெட்டவெளியாக விட்டுள்ளனர்.

கோவிலுக்கு முன் மண்டபம் உள்ளது அங்கு பெரிய மணி கட்டிவைத்துள்ளனர். மண்டபத்தில் வேல் நாட்டு வைத்துள்ளனர். கோவிலுக்குள்ளும் வேண்டுதல் நிறைவேறிய மணிகள் நிறைய கட்டி வைத்துள்ளனர்.

### திருவிழா

மூன்று நாள் திருவிழா சித்திரை மாதம் இரண்டாம் வெள்ளி காப்புக்கட்டி மூன்றாம் வெள்ளி திருவிழா ஆரம்பமாகிறது.

### காப்புகட்டுதல்

ஊர் தலைவர் மற்றும் ஆண்டிபட்டியில் உள்ள சமூக தலைவர்கள் அனைவரும் கூடி திருவிழா நிகழ்வு பற்றி பேசுகின்றனர். சித்திரை இரண்டாம் வெள்ளி இரவு பாத்து மணிக்கு மேல் பன்னிரெண்டு மணிக்கு காப்புக்கட்டுவர்.

முதலில் கோவிலுக்கு கப்புகட்டுகின்றனர் அப்போது வேப்பிலை தோரணத்தை கோவிலுக்கு முன் உள்ள தூண்களில் கட்டிவிடுகின்றனர். பின்னர் மூன்று பூசாரிகள் காப்புகட்டிக்கொள்கின்றனர். அதில் ஒருவர் முனியாண்டிக்கும், இரண்டாவது கருப்பசாமிக்கும், மூன்றாவது கோவில் முறைக்கும் கட்டுகின்றனர். அதன் பின் ஊர் மக்கள் காப்பு கட்டிக்கொள்கின்றனர்.

காப்பு என்பது கொம்புள்ள மஞ்சள் கிழங்கு மற்றும் வெற்றிலை கொண்டு மஞ்சள் கயிற்றில் கட்டி கையில் கட்டிவிடுகின்றனர். பின் அதற்கு மல்லிகை பூ வைத்துவிடுகின்றனர். திருவிழா முடியும் வரை இந்த காப்பு காட்டியவர் கையில் இருக்கும்

**முளைப்பாரி போடுதல்**

முளைப்பாரி போடும் போது மாட்டு எரு, ஆட்டு எரு இடித்து வைத்துக்கொள்கின்றனர். ஒரு மண் கலையம் வாங்கி வந்து அதற்குள் வைக்கோல் வைத்து அதன் மீது எரு போடுகின்றனர். பின்னர் அந்த எரு மீது ஏதாவது ஒரு விதையை தூவி விடுகின்றனர். மற்ற இடங்களில் உள்ளது போல் இங்கு நவதானியங்கள் போடுவது கிடையாது. நெல், கம்பு, போர்மொச்சை, ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்துகின்றார்.

அதிகாலையில் குளித்துவிட்டு வீடு சுத்தம் செய்து முளைப்பாரி போடும் வேலை நடைபெறுகிறது. பொது இடம் அல்லது கடவுள்பக்தி மிகுந்தவர் வீட்டில் வைத்து முளைப்பாரி வளர்க்கின்றனர். சிலர் தங்களது வீட்டிலேயே வளர்க்கின்றனர்.

முளைப்பாரி வடிவம் காவடி, கரகம், மயில் போன்ற வடிவங்களில் வளர்க்கின்றனர். அவரவர் முளைப்பரியை அடையாளம் வைத்து எடுத்துக்கொள்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் இரவு எட்டு மணிக்கு ஒரு சோம்பு தண்ணீர் வைத்து பெண்கள் சுற்றி நின்று கும்மி அடிப்பார். கும்மியடிக்கும்போது கடவுள் பாடல்களையும் நாட்டுப்புற பாடல்களையும் பாடுவர். பின்னர் அந்த சோம்பு தண்ணீரை முளைப்பாரி மீது தெளித்து விடுவர். முதல் மூன்று நாட்கள் ஐந்து முறையும் அடுத்த மூன்று நாட்கள் மூன்று முறையும் கடைசி இரண்டு நாட்கள் இரண்டு முறை தெளித்து விடுகின்றனர்.

**திருவிழா**

சித்திரை மாதம் மூன்றாம் வெள்ளிக்கிழமை திருவிழா ஆரம்பிக்கிறது. அன்று அதிகாலை தீர்த்தம் எடுக்க ஆற்றுக்கு செல்கின்றனர். ஆறு மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. செல்லும் வழியில் உள்ள ஜம்புலிபுத்தூர் நரசிம்மர் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு அந்து வழியாக வைகை ஆற்றுக்கு தீர்த்தம் எடுக்க செல்கின்றனர். அவ்வாறு செல்லும்போது தேங்காய், பழம், பத்தி, சூடம், மல்லிகை பூ, பன்னீர், கரகத்திற்கு சுற்ற வெள்ளை நிற நூல், சுருட்டு, எலுமிச்சை, கரகத்திற்க்கான பித்தளை குடம், ஆகியவை எடுத்துச்செல்கின்றனர்.

ஆற்றுக்கு சென்றவுடன் அனைவரும் குளித்துவிட்டு பித்தளை குடத்திற்க்கு வெள்ளை நூல் சுற்றி தண்ணீர் எடுத்துவந்து சுத்தப்படுத்திய இடத்தில் வைக்கின்றனர். பின் அக்குடத்தில் வேப்பந்தலையை சொருகி வைப்பார். அந்த வேப்பந்தலையை மூன்றாக பிரித்து சந்தனம் தடவிய நூலால் கட்டிவிடுகின்றனர் ஒரு சூலம் போல். பூ அலங்காரம் செய்து சந்தனம் குங்குமம் வைக்கின்றனர். பின்னர் தேங்காய் உடைத்து பத்தி, சூடம் கொளுத்தி, பன்னீர் தெளித்து சாமி கும்பிடுகின்றனர்.

கரகத்தை பூசாரி தலையில் வைத்தவுடன் அவர் சாமியிறங்கி ஆடுகின்றார். கருப்ப சாமி பூசாரி வழிகாட்ட பின்னாலேயே ஒரு எல்லை வரை முனியாண்டி சாமி தொடர்ந்து வருகின்றார். வழியில் இருக்கும் கருப்பு சாமி கோவில் வரை இது தொடர்கிறது. கருப்ப சாமி கோவிலில் பூசை செய்து எலுமிச்சை சுற்றி நான்கு திசைகளிலும் வீசுகின்றனர். அங்கு நீர் தரப்படுகிறது பின்னர் நடந்து ஊருக்குள் வருகின்றனர். ஊர் எல்லையில் உள்ள சிவன் கோவிலில் நிற்கின்றனர்.

ஊருக்குள் தெரிவிக்கப்படுகிறது ஊர் மக்கள் ஒன்றுகூடி நையாண்டி மேளம் அடித்து எதிர்கொண்டு அழைக்க வருவர் அங்கு ஊர் தலைவர்களுக்கு மரியாதை செய்கின்றனர். ஊர் தலைவர்கள் பூசாரிகளுக்கு மல்லு கட்டி மாலை அணிவித்து, சந்தனம், குங்குமம் வைத்து ஊருக்குள் கூட்டி வருகின்றனர்.

ஊருக்குள் வரும்போது முச்சந்திகளில் எலுமிச்சம்பழம் வெட்டி வீசப்படுகிறது. மக்கள் தங்கள் வீடு வாசலில் மஞ்சள் நீர் வைத்துள்ளனர் அதை பூசாரிகளின் கால்களில் ஊற்றி விபூதி பெறுகின்றனர்.சிலர் மாலை அணிவிக்கின்றனர். நல்ல நேரம் பார்த்து கோவிலுக்கு கரகத்தை கொண்டு வருகின்றனர். அய்யர் கரகத்தை இறக்கிவைத்து பூசாரிகளுக்கு வீபூதி வழங்குகிறார். அதன் பின் பூசாரி மக்களுக்கு விபூதி தருகின்றார்.

அதிகாலையில் அனைவரும் ஆற்றுக்கு சென்றபின் அய்யரை கோவிலுக்கு அழைத்து வந்து பால், பன்னீர், கோமியம், மஞ்சள், சந்தனம், இளநீர், விபூதி, அபிஷேகம் நடைபெறுகிறது. தமிழில் மந்திரம் சொல்லி அபிஷேகம் மட்டும் செய்கிறார். அய்யர் அபிஷேகம் செய்த பால் கரகம் இறக்கியவுடன் பிரசாதமாக வழங்கப்படும். அன்று முழுதும் சைவம் அன்னதானம் வழங்கப்படுகிறது.

**மாவிளக்கு**

வெள்ளிக்கிழமையன்று மாலை மாவிளக்கு ஊர்வலம் நடைபெறும். பச்சரிசியை ஊற வைத்து இடித்து மண்டை வெள்ளம் ஏலம் சுக்கு கலந்து பிசைந்து உருண்டை பிடிக்கின்றனர் அதில் குழி செய்து நல்லெண்ணெய் விட்டு ஐந்து திரி போட்டு தீபமேற்றுகின்றனர். அதனுடன் கைப்பிடி அளவு மாவை தனியாக வைக்கின்றனர். அதை படையல் என அழைக்கின்றனர். அது கோவிலுக்கு சேர்ந்தது. சாமிகும்பிட்டவுடன் அந்த படையல் என்பது கோவிலில் எடுத்து வைத்துக்கொள்வர். மாவிளக்குடன் சூடம், பத்தி, சுருட்டு. மாலை, மது கொண்டுசெல்வர், மதுவை சமிக்குமுன் இருக்கும் சிறு குழியில் ஊற்றிவிடுகின்றனர்.

**சனிக்கிழமை**

இரண்டாவது நாள் சனிக்கிழமை காலையில் பால்குடம் எடுப்பார். வேண்டுதல் நிறைவேறியவர்கள் அனைவரும் குழந்தைகள் முதல் பதினைந்து வயது உள்ளவர்கள் வரை அனைவரும் பால்குடம் எடுப்பார்.

பால்குடம் எடுக்க மதுரைக்கு செல்லும் வழியில் உள்ள விநாயகர் கோவிலுக்கு செல்கின்றனர் அங்கு குடங்களுக்கு நூல் சுற்றி பால் நிரப்பிவிடுகின்றனர் பின்னர் பாலில் விபூதி போடுகின்றனர். தேங்காயில் மஞ்சள் அல்லது சந்தனம் தடவி குடத்தின் வாயை மூடும்படி வைத்து மஞ்சள் துணியால் கட்டிவிடுகின்றனர். அதற்க்கு சந்தனம் குங்குமம் வைக்கின்றனர் பூ சுற்றுகின்றனர். பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்து பூசை செய்கின்றனர். அங்கேயே அலகு குத்துகின்றனர் ஊர்வலம் கிளம்பி தெருக்கள் வழியாக மேளதாளத்துடன் வருகிறுது அனைவரது வீட்டின் முன்னும் குடத்தில் மஞ்சள் நீர் வைத்து பால்குடம் மற்றும் அலகு குத்திவருவோர் மீது தோள் முதல் பாதம் வரை ஊற்றிவிடுவர். கோவிலுக்கு சென்றவுடன் பால் அபிஷேகம் செய்து தரப்படும்.

மூன்றாம் வருடம் பால்குடம் எடுப்பவர்கள் பொங்கல் வைத்து அவரவர் வசதிக்கேற்ப சேவல் அல்லது ஆட்டுக்கிடாயை வெட்டி நேர்த்திக்கடன் செலுத்துவர். மொட்டையடிக்கின்றனர்.

அன்று மதியம் காவடி மற்றும் அக்கினிச்சட்டி எடுக்கின்றனர் இதுவும் மதுரை வழியில் இருந்து ஆரம்பிக்கிறது அக்கினிச்சட்டி எடுப்பவர்கள் ஒன்று முதல் முப்பத்தோரு சட்டி வரை எடுக்கின்றனர். அக்கினிச்சட்டிக்குள் நெல் உமி போட்டு வேப்பம் விறகு வைத்து நல்லெண்ணெய் விட்டு எரிய விடுகின்றனர். கையில் சூடுபடாமல் இருக்க வேப்பந்தழை கொண்டு பிடிக்கின்றனர். ஊர் சுற்றி வருகின்றனர் மக்கள் அவர்களுக்கு மஞ்சள் நீர் ஊற்றுகின்றனர். மக்களுக்கு விபூதி வழங்குகின்றனர் அருள் வாக்கு கேட்கப்படுகிறது குழந்தை வேண்டும் என்பவர்கள் வேண்டுதலாக பால் வாங்கி தருகின்றனர். அருள்வாக்கு கூறுபவர் அவர்களுக்கு வளையல்கள் போட்டுவிடுகின்றனர்.

காவடி வெட்டிவேரால் அலங்காரம் செய்யப்பட்டிருக்கும் காவடி எடுக்கும் அனைவரும் அலகு குத்தியிருப்பார். அழகி வேல் மற்றும் சூலம் வடிவத்தில் இருக்கும். வெள்ளியில் செய்யப்பட்டிருக்கும் நாக்கு மற்றும் வாயின் இரு பக்க கன்னங்களிலும் குத்திவிடுவர். பூசாரி தான் அலகு குத்துவது மற்றும் எடுப்பது இரு வேலைகளையும் செய்வார்.அலகு எடுத்த பின் தேங்காய் தின்ன தரப்படும் அந்த தேங்காய் பால் காயம் ஆற உதவியாக இருக்கும் என்பதால் தருகின்றனர். காவடி தீச்சட்டி மூன்று வருடங்கள் தொடர்ந்து எடுத்தவர்கள் ஆட்டுக்கிடா வெட்டுகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை கிடா வெட்டு, பொங்கல், மொட்டையடிக்கும் நிகழ்ச்சி கிடா வெட்டுதல் மற்றும் சேவல் அறுப்பதி கோவில் பூசாரியே செய்வார் கிடாய் தலை மற்றும் சேவலின் தலை கோவிலுக்கு சேர்ந்தது. அந்த தலைகளை பூசாரி வைத்துக்கொள்வார் அவரது உறவினர்களுக்கு கொடுத்துவிடுவார்.

ஆடு மற்றும் சேவல் வெட்ட கோவிலுக்கு வரும்போதே பொங்கல் வைக்க பாத்திரம், அரிசி, வெள்ளம், விறகு ஆகியவற்றை கோவிலுக்கு கொண்டு வருகின்றனர்.

முதலில் பொங்கல் வைக்கும் வேலை நடக்கிறது. பொங்கல் பொங்கிய பின்னர் தான் பலியிடும் சடங்கு நடக்கிறது. பொங்கும் பொது குலவையிடுகின்றனர். பொங்கல் செய்தவுடன் சாமிமுன் படையலிட்டு தேங்காய் பழம் வைத்து கும்பிடுகின்றனர். பொங்கலை வீட்டிற்கு கொண்டு சென்று அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கின்றனர்.

பொங்கல் வைப்பது சனி, ஞாயிறு இரு நாட்களில் பகல் பொழுதில் எப்போது வேண்டுமானாலும் வைத்துக்கொள்கின்றனர். மூன்றுவருடம் தொடர்ந்து பால்குடம், அக்கினிச்சட்டி, காவடி எடுப்பவர்கள் மொட்டையடிகின்றனர். அத்துடன் அவர்களது வருடாந்திர வேண்டுதல் முடிவடைகிறது. மதியம் சேத்தாண்டி வேடம் போடுகின்றனர் வீடு வீடாகச் சென்று பணம் பெறுகின்றனர்.

**முளைப்பாரி ஊர்வலம்**

மாலை ஆறு மணிக்கு முளைப்பாரி ஊர்வலம் நடைபெறும். முளைப்பாரி எந்த வீடு அல்லது பொது இடத்தில் வளர்க்கப்பட்டதோ அங்கு சென்று அவரவர் முளைப்பாரியை எடுத்து பூ, சந்தனம் குங்குமம் வைக்கின்றனர். பின்னர் முளைப்பாரியை நடுவில் வைத்து பெண்கள் அனைவரும் கும்மி அடிப்பார்கள். முளைப்பாரியை வளர்த்தவருக்கு அனைத்து பெண்களும் சேர்ந்து சேலை அல்லது பணம் கொடுத்த பின் தான் தங்களது முளைப்பாரியை எடுக்கின்றனர்.

கோவிலிலிருந்து மேளதாளத்துடன் ஊர் பெரியவர்கள் வந்து முளைப்பாரி ஊர்வலத்தை அழைத்துச்செல்கின்றனர் வீட்டில் தனியாக வளர்ப்பவர்களும் ஊர்வலத்தில் பங்கெடுக்கின்றனர். ஊர்வலம் வழியில் உள்ள கோவில்களுக்கு சென்று கடைசியாக முனியாண்டி கோவிலுக்கு சென்றடையும். முதலில் மாரியம்மன் கோவில், முத்தாலம்மன் கோவில், விநாயகர் கோவில், காளியம்மன் கோவில், மீனாட்சியம்மன் கோவில் சென்று கடைசியாக முனியாண்டி கோவிலுக்கு செல்லும் கோவிலை அடைந்தவுடன் மூன்றுமுறை கோவிலை சுற்றி வந்து முளைப்பாரியை இறக்கிவைத்து பெண்கள் கும்மியடிபார்கள். வேண்டுதல் நிறைவேறியவர்கள் முளைப்பாரி எடுத்தவர்களுக்கு பரிசுப்போருள்கள் தருகின்றனர்.

திங்கள் கிழமை காலையில் கரகம் முளைப்பாரி ஆகியவற்றை மாரியம்மன் கோவிலில் வைத்து கும்மியடித்துவிட்டு பூஞ்சோலை எனும் இடத்திற்கு எடுத்துச்செல்கின்றனர். அங்கிருக்கும் கிணற்றில் போட்டுவிடுகின்றனர். சூடம் பொருத்தி வழிபட்டுவிட்டு வருகின்றனர். கரகத்தை கிணற்றில் போடும் பொது பூசாரியை தூரமாக அனுப்பிவிடுகின்றனர்.

**மஞ்சள் நீராட்டு விழா**

கரகம் கரைத்தபின் வீட்டிற்க்கு வந்து மஞ்சள் நீராட்டு நடைபெறுகிறது. ஊர்கட்டுப்பாட்டுடன் குறிப்பிட்ட நேரத்தில் விழா முடிவடைகின்றது. பின்னர் உண்டியல் பணம் பள்ளையம் பிரிக்கும் பணி நடக்கிறது. பந்தலில் உள்ள தேங்காய், பழம், நுங்கு, ஆகியவற்றை ஏலம் விட்டு கோவிலுக்கு சேர்க்கின்றனர். பூசாரிகளுக்கு சம்பளம் தரப்படுகிறது. இத்துடன் விழா முடிவடைகிருது